## யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
## தவணைப் பரீட்சை, யூன் - 2016
## Term Examination, June - 2016

FWC

| தரம் :- 13 (2016) | மனைப்பொருளியல் – I | நேரம் :- 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ சரியான விடையினைத் தெரிவு செய்க.

பகுதி – I

(01) நீலப்பிரதியில் அடங்கும் தளத் திட்டத்தினால் காட்டப்படும் விடயம்?
(1) அத்திவாரம் பற்றிய விபரங்கள்
(2) அறைகள் அமைந்துள்ளவிதம்
(3) கதவுகளினதும் யன்னல்களினதும் உயரம்
(4) காற்றுத் துவாரங்களின் இட அமைவு
(5) முன்பக்கத் தோற்றம்

(02) வர்ணத்தின் பெறுமானத்தை அல்லது பெறுமதியைக் காட்டும் கருவி எது?
(1) மழைமானி (2) நிறமானி (3) வெப்பமானி
(4) வோல்ற்றுமானி (5) மின்மானி

(03) மலர் ஒழுங்கு தொடர்பாக மாணவர்கள் முன்வைத்த சில விடயங்களுள் சரியானது எது?
(1) மலர் ஒழுங்கு செய்வதற்கு உயரம் குறைந்த பூந்தாழிகள் தெரிவு செய்யப்படுகின்றன.
(2) மலர் ஒழுங்கில் மேலே சிறிய மலர்கள் இடப்படுகின்றன.
(3) நறுமணமற்ற பூக்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன.
(4) உலர்ந்த மலர்கள் மலர் ஒழுங்கில் கீழே பயன்படுத்தப்படுகின்றன.
(5) இலைகளும் கிளைகளும் மலர் ஒழுங்கின் அடியில் பயன்படுத்தப்படுகின்றன.

(04) உணவைக் கலப்பதற்கு பயன்படுத்தப்படும் மின் உபகரணங்கள் பற்றி மாணவர்கள் தெரிவித்த சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - வெப்பத்தைக் கட்டுப்படுத்த வெப்பநிறுத்தி இருக்கின்றது.
B - மூவூசிச் செருகியைப் பயன்படுத்துதல் மிகவும் உகந்தது.
C - சில சாதனங்களில் சுழற்சிக் கதியைக் கட்டுப்படுத்தலாம்.
D - உலர் உணவுக் கூறுகளைக் கலப்பதற்கு உகந்தது.
E - உணவு உருப்படிகளுக்கு ஏற்ப வெட்டும் அலகுகளை மாற்றலாம்.
மேற்குறித்தவற்றில் அரைப்பான் பற்றிய கூற்றுக்கள் இடம்பெறுவது
(1) A, B ஆகியவற்றில்
(2) A, E ஆகியவற்றில்
(3) B, C ஆகியவற்றில்
(4) C, D ஆகியவற்றில்
(5) D, E ஆகியவற்றில்

**(05)** இரண்டு அத்தியாவசிய அமினோஅமிலங்கள்

(1) கிளைசீனும் இலைசீனும் (2) திரிப்ரோபனும் புரோலீனும்

(3) இலைசீனும் மெத்தியோனினும் (4) லியூசீனும் ரைரோசீனும்

(5) வலீனும் கிளைசீனும்

**(06)** உடலில் தசைப்பதன் கட்டுப்பாட்டுடன் தொடர்புபட்ட கனிப்பொருள்

(1) சோடியம் (2) அயடீன் (3) கல்சியம்

(4) நாகம் (5) மக்னீசியம்

**(07)** உடலில் இரும்பு அகத்துறிஞ்சலுக்குத் தடையாக இருக்கும் ஒரு காரணி

(1) ஐதரோக்குளோரிக்கமிலம் (2) சித்திரிக்கமிலம் (3) அமினோ அமிலங்கள்

(4) பைற்றிக் அமிலம் (5) இஸ்கோபிக் அமிலம்

**(08)** 100 கிராம் அரிசியின் போசணை அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| காபோவைதரேற் | 78.2 g | புரதம் | 6.8 g |
| கொழுப்பு | 0.5 g | நீர் | 13.7 g |

அதன் கலோரி பெறுமானம்

(1) 245 கலோரிகள் (2) 280 கலோரிகள் (3) 345 கலோரிகள்

(4) 280 கலோரிகள் (5) 425 கலோரிகள்

**(09)** பின்வருவனவற்றுள் எது கூட்டுப் புரதம்?

(1) மயோசின் (2) குளுட்டன் (3) ஜெலற்றீன்

(4) இலிப்போபுரதம் (5) ஓவோவிற்றாலின்

**(10)** பூசணிக்காய், பீற்றூட், அகத்தி என்பவற்றில் காணப்படும் பிரதான நிறப் பொருள்கள் முறையே

(1) கரட்டினோயிட், அந்தோசயனின், குளோரோபில்

(2) குளோரோபில், பிளேவோன், கரட்டினோயிட்

(3) கரட்டினோயிட், குளோரோபில், அந்தோசயனின்

(4) கரட்டினோயிட், அந்தோசயனின், பிளேவோன்

(5) அந்தோசயனின், பிளேவோன், குளொரோபில்

**(11)** சிபார்சு செய்யப்பட்ட நாளாந்த போசணைத் தேவையின்படி (2007) உச்ச அளவிலான கலோரித் தேவையுள்ள தனியாட்கள்

(1) கட்டிளம் பருவ ஆண்கள் (2) கர்ப்பிணித் தாய்மார்கள் (3) வயது வந்த பெண்கள்

(4) பாலூட்டும் தாய்மார்கள் (5) கட்டிளம் பருவப் பெண்கள்

**(12)** அதிஉயர் வெப்பம் நற்காப்புப் பொருள்கள் சேர்த்தல் ஆகிய நுட்பங்களைப் பிரதானமாகப் பயன்படுத்தி பதப்படுத்தப்பட்டு பேணப்படும் உணவுகள் முறையே

(1) தக்காளிச் சட்னி, ஒடுக்கிய பால் (ரின்பால்) (2) தயிர், கருவாடு

(3) விளாம்பழ ஜாம், மலே அச்சாறு (4) பால்மா, உலர்த்திய பலாக்கா

(5) கிருமியழித்த பால், மாம்பழகோடியல்

(13) பின்வருவன X என்ற நற்காப்புச் செய்து பேணிப் பதப்படுத்தப்பட்ட உணவுடன் சம்பந்தப்பட்ட தோற்றப்பாடுகள் ஆகும்.

★ $PH$ பெறுமானம் ★ புறப்பிரசாரணம் ★ பரவல்

இவ் நற்காப்புச் செய்து பேணப்பட்ட உணவு X ஆனது

(1) உருளைக்கிழங்கு தோசி (2) சமன்மீன் (3) சீனிச்சம்பல்
(4) மீன்புளித்தீயல் (5) நெத்தலிக் கருவாடு

(14) உணவு நஞ்சாதலுக்கு ஏதுவான பற்றீரியா இனம்

(1) ஹெலிக்கோபக்ரர் பைலோரா (2) குளோஸ்திரிடியம் பொட்டுலினம்
(3) அசற்றோ பக்ரர் அசிற்றை (4) ஸ்ரெப்ரோ கொக்கஸ் லக்ரிஸ்
(5) லக்ரோபசிலஸ்பல்காரிக்கஸ்

(15) உணவுக் கால்வாயினுள் அதிக அளவு நீர் மீள அகத்துறிஞ்சப்படுவது

(1) இரப்பையில் (2) முன்சிறுகுடலில் (3) சிறுகுடலில்
(4) பெருங்குடலில் (5) நேர்குடலில்

(16) போசணைப் பொருள்களின் அனுசேபத்திற்குத் தேவையான துணைநொதியங்களின் தொகுப்பில் செயற்படும் இரண்டு விற்றமின்களாவன

(1) தயமினும் விற்றமின் C உம் ஆகும்.
(2) இரைபோபிளேவினும் நயாசினும் ஆகும்.
(3) பிரிடொக்சினும் விற்றமின் K உம் ஆகும்.
(4) விற்றமின் E உம் விற்றமின் D உம் ஆகும்.
(5) விற்றமின் A உம் போலிக்அமிலமும் ஆகும்.

(17) பெண்களில் இனப்பெருக்க ஓமோன்களின் சுரத்தலைத் தூண்டும் அகஞ்சுரக்கும் சுரப்பி

(1) கபடிச்சுரப்பி (2) அதிரீனற் சுரப்பி (3) பராதைரோயிட்சுரப்பி
(4) வியர்வைச்சுரப்பி (5) தைரோயிட்சுரப்பி

(18) பிரசவத்திற்கு முன்னரான தாய் சேய் பிணியாய் நிலையத்தில் முதிர்மூவுருவின் நரம்புக் குழாயின் வளர்ச்சிக்காக வழங்கப்படும் போசணைப் பொருள் / குறைநிரப்புப் போசணைப் பொருள் யாது?

(1) விற்றமின் C (2) போலிக்கமிலம் (3) திரிபோஷா
(4) கல்சியம் (5) இரும்பு

(19) தற்கால தேசிய நிர்ப்பீடனமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்ப JE (ஜப்பானிய என்செபலைற்றின்) வக்சின் வழங்கப்படுவதற்குரிய பிள்ளையின் வயது

(1) 2 மாதங்கள் (2) 4 மாதங்கள் (3) 6 மாதங்கள்
(4) 9 மாதங்கள் (5) 18 மாதங்கள்

(20) முன்பிள்ளை அபிவிருத்தி நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் செயற்பாடுகளுள் சமூக விருத்திக்கு மிகவும் உதவக்கூடிய செயற்பாடு

(1) வரைதல் (2) களியினால் உருவங்களை வடிவமைத்தல்
(3) ஊஞ்சலாடுதல் (4) எழுத்துக்கள் எழுதுதல்
(5) விளையாட்டு வீட்டில் விளையாடுதல்

**(21)** செதில் தன்மையான தோற்றமும் ஒளிபுகவிடும் தன்மையும் இரண்டு வகையான நார்கள் காட்டும் இரண்டு இயல்புகள் ஆகும். இவ் இரண்டு நார்களும் முறையே

(1) பொலியெஸ்ரர், இலினன் என்பனவாகும்.

(2) கம்பளி, சணல் என்பனவாகும்.

(3) றேயோன், இலினன் என்பனவாகும்.

(4) கம்பளி, நைலோன் என்பனவாகும்.

(5) இலினன், சணல் என்பனவாகும்.

**(22)** மார்பு அளவு $85\,cm$ (34") உள்ள பெண்ணொருவருக்கு உடற்பகுதியின் முற்பக்க அடிப்படை மாதிரியுருவை வரைவதற்கு கணிக்கப்பட்ட மார்பு அளவு

(1) 20.5 cm (2) 21.2 cm (3) 22.6 cm

(4) 23.3 cm (5) 24.7 cm

**(23)** துணிகளை மினுக்குவதில் பயன்படுத்தும் இரசாயனப் பொருள்

(1) சோடியம் காபனேற்

(2) கல்சியம் குளோரைட்

(3) மக்னீசியம் சல்பேற்

(4) சோடியம் ஐதரொட்சைட்

(5) கல்சியம் காபனேற்

**(24)** ஒட்சியேற்ற வெளிற்றல் காணப்படும் ஒரு சந்தர்ப்பம்

(1) வெப்பமான சூரிய ஒளியில் உலர்த்தல்

(2) நீலமிடல்

(3) பிரான்சிய சோக் பிரயோகித்த பின் உலர்த்தல்

(4) புல் தரையின் மீது காயவிடல்

(5) வினாகிரியில் அமிழ்த்தி வைத்தல்

**(25)** பின்வருவனவற்றுள் உலர் சலவை தொடர்பான சரியான கூற்று எது?

(1) உலர் சலவைக் கருவிகளில் சில மணித்தியாலங்கள் ஊற வைத்தல்

(2) வர்ணத் துணிகளுக்கு இது உகந்ததல்ல

(3) பயன்படுத்தும் இரு வகையான தூய்தாக்கம். சலவைக் கருவிகளாவன கரைப்பான் களும் உறிஞ்சிகளும் ஆகும்.

(4) எந்த வகையான நாரினால் செய்யப்பட்ட துணிகளுக்கும் உகந்ததாகும்.

(5) தூய் தாக்கும் சலவைக் கருவிகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்குச் சிறிது உப்பு சேர்க்கப்பட வேண்டும்.

**(26)** மும்மைவர்ண திட்டத்திற்கு உதாணரம்

(1) பச்சை, நீல ஊதா, சிவப்பு

(2) மஞ்சள், செம்மஞ்கள், சிவப்பு செம்மஞ்சள், சிவப்பு ஊதா

(3) மஞ்சள், சிவப்பு, ஊதா

(4) மஞ்சட்பச்சை, நீலஊதா, சிவப்பு செம்மஞ்சள்

(5) நீலப்பச்சை, சிவப்புஊதா, மஞ்சள் பச்சை

(27) உயரம் குறைவான அறையை உயரம் கூடியதாகக் காட்டுவதற்குரிய முறை?

(1) ஜன்னலுக்கான திரைச் சீலையை மென்மை / இள மென்னிறத்தில் பயன்படுத்தல்

(2) பாவுகைக்கு மென்னிறங்கள் பயன்படுத்தல்

(3) தளபாடங்களுக்கான மெத்தையணிகளைப் பயன்படுத்தல்

(4) அடுத்துள்ள பக்கச் சுவர்களுக்கு மென்னிறங்களைப் பயன்படுத்தல்

(5) மென்னிறக் கம்பளத்தைப் பயன்படுத்தல்

(28) வீட்டில் நாளாந்தம் ஏற்படக்கூடிய பிரச்சினையான நிலைமைகளை முகாமிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் மாணவர் குழு ஒன்று பங்குபற்றியது. அவர்கள் முன்வைத்த பின்வரும் விடயங்களில் இருந்து சரியான உண்மை எது?

(1) தந்தையால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு எப்பொழுதும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

(2) துரிதமான தீர்மானம் எடுத்தல் மிக உகந்தது

(3) குடும்ப அங்கத்தவர்களின் பிரச்சனைகளைக் கலந்துரையாட வேண்டும்

(4) எப்பொழுதும் பிரச்சனைகள் எழாவண்ணம் செயற்பட வேண்டும்

(5) எப்பொழுதாயினும் பிரச்சினைகள் எழும்போது மூத்தோரின் அபிப்பிராயங்களைப் பெறல்

(29) மின்அழுத்தியைப் பயன்படுத்தி துணிகளை அழுத்தும்போது பின்பற்ற வேண்டிய படிமுறை

(1) காவலி ஒன்றின் மீது நிலைக்குத்தாக அழுத்தியை வைத்தல்

(2) கடத்தி ஒன்றின்மீது அழுத்தியை நிலைக்குத்தாக வைத்தல்

(3) காவலி ஒன்றின் மீது அழுத்தியை கிடையாக வைத்தல்

(4) கடத்தி ஒன்றின் மீது அழுத்தியை கிடையாக வைத்தல்

(5) எல்லாத் துணிகளையும் தாழ்ந்த வெப்பநிலையில் அழுத்துதல்

(30) இறைச்சியில் காணப்படும் இரண்டு புரதங்கள்

(1) மயோசின், குளுற்றின் (2) கேசிக், லெகுமின் (3) இலாஸ்ரின், மயோசின்

(4) கேசின், கொலஜின் (5) இலாஸ்ரின் : லெகுமின்

(31) கட்டமைப்பில் காபொட்சைல் கூட்டத்தைக் கொண்ட போசணைப் பொருள் எது?

(1) புரதம் (2) கொழுப்பு (3) காபோவைதரேற், கொழுப்பு

(4) கொழுப்பு, புரதம் (5) காபோவைதரேற், புரதம்

(32) குடலுக்குரிய பற்றீரியாவினால் தொகுக்கப்படும் விற்றமின் பின்வருவனவற்றுள் எது?

(1) விற்றமின் A (2) விற்றமின் C (3) விற்றமின் D

(4) விற்றமின் E (5) விற்றமின் K

(33) உடலுக்கு நாகம் இன்றியமையாத கனிப்பொருள் ஒன்றாகக் கருதப்படுவதற்குக் காரணம்

(1) இரும்பு அகத்துறிஞ்சலுக்கு உதவுதல்

(2) புரதங்களின் தொகுப்புக்குத் தேவை என்பதனால்

(3) நீர்ச் சமநிலைக் கட்டுப்பாட்டில் செயற்படுத்தல்

(4) இன்சுலினின் ஒரு கூறாக இருத்தல்

(5) என்பின் சேர்க்கையைப் பேணுவதில் அது தேவைப்படுதல்

(34) நப்தோல் சாயம் வற்சாயம் நார்எதிர்ப்புமுறைச் சாயம் பயன்படுத்தப்படும் அச்சிடல் முறையானது?
(1) சட்டக அச்சிடல்
(2) எதிர்ப்புமுறை அச்சிடல்
(3) ஸ்டென்சில் மூலம் அச்சிடல்
(4) உருளை அச்சிடல்
(5) உருவமை மூலம் அச்சிடல்

(35) மனித உடலில் அமில, காரச் சமநிலையைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான இரண்டு கனிப்பொருள்கள்
(1) மங்கனீஸ், கல்சியம் ஆகியன
(2) இரும்பு, மங்கனீஸ் ஆகியன
(3) சோடியம், இரும்பு ஆகியன
(4) கல்சியம், பொற்றாசியம் ஆகியன
(5) சோடியம், பொற்றாசியம் ஆகியன

(36) உடலில் போசணைப் பொருளின் அகத்தறிஞ்சல் தொடர்பான சரியான கூற்று பின்வருவன வற்றுள் எது?
(1) அமினோஅமிலங்கள் பெருங்குடலில் குருதியினுள் அகத்துறிஞ்சப்படும்
(2) குளுக்கோசும் நீரும் பெருங்குடலில் குருதியினுள் அகத்துறிஞ்சப்படும்
(3) இரும்பின் அகத்துறிஞ்சல் நார்களினால் விரைவுபடுத்தப்படும்
(4) கொழும்பில் கரையும் விற்றமின்கள் குருதி ஓட்டத்தினுள் அகத்துறிஞ்சப்படும்
(5) நீண்டசங்கிலி கொழுப்பமிலங்கள் நிணநீரினுள் அகத்துறிஞ்சப்படும்

(37) உடலில் இடம்பெறும் உத்தேசச் செயன்முறைக்கு உதாரணம்
(1) ஓமோன்களின் தொகுப்பு
(2) சக்தி உற்பத்தி
(3) சிக்கலான போசணைப் பொருள்களாக மாற்றீடு செய்தல்
(4) யூரியாவினதும் யூரிக்கமிலத்தினதும் தொகுப்பு
(5) சுவாசச் செயன்முறை

(38) போசணைப் பொருள்களின் "அனுசேபம்" தொடர்பான சரியான கூற்று யாது?
(1) கிரெப்பான் வட்டம் ஒரு காற்றின்றிய செயன்முறையாகும்
(2) கிளைக்கோப்பகுப்பின் போது அனேக ATP மூலக்கூறுகள் உற்பத்தி செய்யப் படுகின்றன.
(3) கிளைக்கோப்பகுப்பின் இறுதியில் பைருவிக் அமிலம் உருவாகின்றது
(4) அனுசேபத்தின் இறுதி விளைபொருளாக ஒட்சிசனும் நீரும் உற்பத்தி செய்யப் படுகின்றன.
(5) கிளைக்கோப்பகுப்பு ஒரு காற்றிற் செயன்முறையாகும்

(39) உடலில் எதிர் நைதரசன் சமநிலை ஏற்படுவதற்கான எடுத்துக்காட்டு
(1) நோயிலிருந்து உடல் தேறலின் போது
(2) வளர்ச்சிப் பருவத்தின்போது
(3) கர்ப்ப நிலையின் போது
(4) கடுமையான தீக்காயத்தின்போது
(5) பாலூட்டும் நிலையின்போது

**(40)** A புவிக்கம்பி (E)

B நொதுமல்கம்பி (N)

C உயிர்க்கம்பி (L)

இவற்றில் விளக்குச் சுற்றுக்குப் பயன்படுத்தப்படும் கம்பி எது

(1) EN (2) EL (3) EE

(4) LN (5) LL

**(41)** குளிர்சாதனப் பெட்டியில் உணவுப் பொருள்களைச் சேமிக்கும்போது செய்யத்தகாதது

(1) மூடிய பெட்டிகளில் வைத்தல்

(2) சுவையும் மணமும் கலக்காதவாறு வைத்தல்

(3) மீனைக் கழுவி நீரை வடியச்செய்து ஆழ்குளிரூட்டிப் பகுதியில் வைத்தல்

(4) காய்கறிகளைத் துளைகளைக் கொண்ட பொலித்தீன் பைகளில் வைத்தல்

(5) முட்டைகளைக் கழுவி கதவில் வைத்தல்

**(42)** பின்வருவனவற்றுள் கொளுமையான நபர் ஒருவருக்கு மிக உகந்த உணவு வேளையாக இருக்கக் கூடியது

(1) தவிட்டரிசிச்சோறு, பீர்க்கங்காய் கறி, சுவையூன்மீன்கறி, வெண்டைக்காய் கறி, தக்காளி சலட்

(2) தவிட்டரிசிச்சோறு, பருப்புக்கறி, சுவையூண் இறைச்சிக்கறி, சாம்பல் வாழைக்காய் பொரியல், வல்லாரைச்சலாது

(3) புழுங்கல் அரிசிச்சோறு, மீன் வெள்ளைக்கறி, போஞ்சிக்கறி, சிறகவரை வதக்கல், பீட்றூட்சலாது

(4) புழுங்கல் அரிசிச்சோறு, கோவாக்கறி, உருளைக்கிழங்குகறி, சோயா கறி, பொன்னாங்காணிவறை

(5) புழங்கல் அரிசிச்சோறு, மீன்வெள்ளைக்கறி, போஞ்சிக்கறி, சிறகவரை வதக்கல், பீற்றூட்சலாது

**(43)** உணவு தயாரிக்கும் போது கபில நிறமடைதலுக்கான சிலநிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் டெக்ஸ்ரினாக்கத்தைக் காட்டுவது

(1) வட்டிலப்பம் தயாரிக்கும்போது

(2) பாகற்காய்த்துண்டுகளைப் பொரிக்கும்போது

(3) பாண்வாட்டும்போது

(4) சீனிப்பாணித் தேங்காய் துருவல் தயாரிக்கும்போது

(5) பழுத்த வாழைப்பழத்துண்டுகளை வெட்டி வைக்கும்போது

**(44)** இறைச்சி, மீன், காய்கறிகளின் மெல்லவியல் என்பது

(1) உயர்ந்த வெப்பநிலையில் மூடி திறந்த நிலையில் குறுகிய நேரம் சமைத்தல்

(2) உயர்ந்த வெப்பநிலையில் மூடிய நிலையால் குறுகிய நேரம் சமைத்தல்

(3) தாழ்ந்த வெப்பநிலையால் மூடி திறந்த நிலையால் நீண்டநேரம் சமைத்தல்

(4) தாழ்ந்த வெப்பநிலையால் மூடப்பட்ட நிலையால் நீண்டநேரம் சமைத்தல்

(5) தாழ்ந்த வெப்பநிலையால் மூடப்பட்ட நிலையால் குறுகிய நேரம் சமைத்தல்

**(45)** உணவு பதனிடும்போது ஒட்சியேற்ற எதிரிகள் பயன்படுத்தப்படுகின்றன.

(1) விற்றமின் A, D (2) விற்றமின் A, K (3) விற்றமின் C, D

(4) விற்றமின் C, E (5) விற்றமின் E, K

**(46)** ஜாம் தயாரிக்கும்போது நற்காப்பு நுட்பமாக சீனி பயன்படுத்தப்படுவதால், நுண்ணுயிர்களின் வளர்ச்சி தடைப்படுவது

(1) அகப்பிரசாரத்தினாலாகும்

(2) அமிலத்தன்மை அதிகரிப்பதனாலாகும்

(3) அமிலத்தன்மை குறைவதனாலாகும்

(4) செறிவு குறைவதனாலாகும்

(5) செறிவு அதிகரிப்பதனாலாகும்

**(47)** மூளைய நிலையின் விருத்தி தொடர்பாகச் சரியான கூற்று எது?

(1) கருக்கட்டப்பட்ட நேரத்திலிருந்து ஏறத்தாழ பதினைந்து வாரங்கள் முளையப்பருவங்கள் எனப்படுகின்றன.

(2) முளையநிலைத் தொடக்கத்தின்போது இலிங்கம் தீர்மானிக்கப்படும்

(3) முளைய நிலையில் எல்லா அங்கங்களும் தொழிற்படும்

(4) முளைய நிலையின்போது உடலின் நிறையும் நீளமும் விரைவாக அதிகரிக்கும்

(5) முளைய நிலையில் உயிரியின் அசைவுகள் அவதானிக்கப்படுவதில்லை

**(48)** நான்கு மாதங்களைப் பூர்த்தி செய்த குழந்தைக்கு வழங்கப்படும் வக்சீன்

(1) முதலாவது தடவை வழங்கப்படும் ஐவலுவுள்ள (Pen tavalent) வக்சீன்

(2) முதலாவது தடவை வழங்கப்படும் போலியோ வக்சீன்

(3) MMR வக்சீன்

(4) இரண்டாவது தடவை வழங்கப்படும் போலியோ ஐவலுள்ள வக்சீன்

(5) மூன்றாவது தடவை வழங்கப்படும் போலியோ வக்சீன்

**(49)** பின்பிள்ளைப் பருவப் பிள்ளைகள் தொர்பாகத் தவறான கூற்று எது?

(1) நுண்ணறிவின் அளவீடு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட முடியும்.

(2) சிக்கலான இயக்கச் செயற்பாடுகளுக்குப் பயிற்றுவிக்க முடியும்.

(3) கண் - கை இயைபாக்கம் விருத்தி செய்யப்படுகிறது

(4) தமது வெளித்தோற்றம் பற்றி மிகவும் அக்கறை கொண்டிருத்தல்

(5) குழுச் செயற்பாடுகளில் அர்வம் காட்டல்

**(50)** கைக்கால்விளிம்புகளின் பொருத்து மாற்றும் கழுத்தின் நேர்த்தியில் பயன்படுத்தப்படுவன முறையே பின்வருவனவற்றுள் எது?

(1) வெட்டுக்குத்து மீன் முள்ளுத்தையல், கம்பளித்தையல்

(2) அலங்கார நுண்நாடா, வெட்டுக்குத்து மீன் முள்ளுத்தையல்

(3) கம்பளித்தையல், உருவமுகப்புத்துண்டு

(4) அலங்கார நுண்நாடா, விளிம்பு மூடித்தைத்தல்

(5) உருவ முகப்புத்துண்டு, கம்பளித் தையல்